# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0019/2016

ஆணை எண்.003/2016

நாள்: 18/01/2016

திருமதி. வனிதா பிரான்சிஸ்,
5வது வார்டு உறுப்பினர்,
காவனூர் ஊராட்சி,
அரக்கோணம்,
பின்கோடு–631 004

– முறையீட்டு மனுதாரர்

ஊராட்சி தலைவர்,
காவனூர் ஊராட்சி
அரக்கோணம்,

– எதிர் மனுதாரர்

அரக்கோணம், காவனூர் ஊராட்சி, 5வது வார்டு உறுப்பினர் திருமதி. வனிதா பிரான்சிஸ் என்பவர் காவனூர் ஊராட்சி தலைவர் செய்யும் முறைகேடு பற்றி புகார் மனு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்படி மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.1.2016 அன்று பெறப்பட்டு மனு எண்.19/2016–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆணை:**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 சட்டப்பிரிவு 2க்குட்பட்ட உட்பிரிவுகள் (7) மற்றும் (11)ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுபணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஊராட்சி மன்ற அமைப்பு (ம) ஊராட்சி பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. எனவே, வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், காவனூர் ஊராட்சி மன்ற

தலைவர் மீதான புகார் மீது நடவடிக்கை மேற்கொள்வது இம்முறைமன்ற நடுவரின் விசாரணை வரம்பிற்கு உட்படாது. எனவே, மனுதாரர் குறிப்பிட்டுள்ள முறைகேடுகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, புகார் மனுவினை வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அமைப்பு முடிவு செய்து அதன் அடிப்படையில் முறையீட்டு மனு முடித்து வைக்கப்படுகின்றது.

ஒம்/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அமைப்பு
சென்னை–600 032

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

18/1/16

கண்காணிப்பாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

நகல்

திருமதி. வனிதா பிரான்சிஸ்,
5வது வார்டு உறுப்பினர்,
காவனூர் ஊராட்சி,
அரக்கோணம்,
பின்கோடு–631 004